**கவனிக்க.**-2022.08.05 ஆந் திகதிய 2292 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ), பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2293 - 2022 අගෝස්තු මස 12 වැනි සිකුරාදා - 2022.08.12

*2293 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1246 |


**கவனிக்க.**- ஹைகம்புர சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, யூலை மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1243-B 82371-5,413 (2022/ 08)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாய அமைச்சு

## கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான
மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2021 (2022)

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் 1 ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2022, செத்தெம்பர் மாத ஆரம்பத்தில் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2022.08.08 ஆந் திகதிக்கு இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. ***பரீட்சை தொடர்பான விபரம்.-*** இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் 08 ஆம் பந்தியின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அங்கு ஐந்தாவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சை தொடர்பான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| முகாமைத்துவம் | 3 மணித்தியாலம் | 100 | 40 |

3. ***பரீட்சையின் பொருட்டு பாடவிதானம் :***

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|
| முகாமைத்துவம் | 01 முகாமைத்துவக் கோட்பாடுகள்<br>02 முகாமைத்துவச் செயற்பாடுகள்<br>03 முகாமைத்துவச் சூழல்<br>04 பங்குபற்றுகை முகாமைத்துவம்<br>05 பொது மக்கள் தொடர்பு கொள்கை<br>06 நல்லாட்சி<br>07 ஒழுக்கநெறி |

சித்தியடையும் பொருட்டு வினாப்பத்திரத்திற்கு ஆகக் குறைந்தது 40% புள்ளிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் அமையப் பெறும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழிமூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.

5. விண்ணப்பப்பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 தாளில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும்.

6. அந்த விண்ணபத்தின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்திருத்தல் பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து அல்லது பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிழும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

7. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய பரீட்சையை நடாத்தும் அதிகாரி கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் ஆவார். பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்தினாலான பரீட்சைகளின் பொருட்டு உரித்தாகின்ற சகல சட்ட ஒழுங்குவிதிகளும் இப்பரீட்சைக்கும் பொருந்தும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

8. விண்ணப்பங்கள் யாவும் 2022, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இல. 13,
கெட்டம்பே, பேராதனை.

9. முதற்றடவையாக பரீட்சைக்கு அமருகின்ற விண்ணப்பதாரர்களிமிருந்து பரீட்சையின் பொருட்டு கட்டணம் அறவிடப்படமாட்டாது. இரண்டாவது தடவையாக பரீட்சைக்கு அமருகின்ற உத்தியோகத்தர்கள் பரீட்சை கட்டணமாக ரூபா 600.00 செலுத்த வேண்டும். அந்த பரீட்சைக் கட்டணத்தை கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-99-00 இற்கு வரவு வைக்குமாறு தீவில் அமையப் பெற்றுள்ள எந்தவொரு தபால்/ உபதபால் பணிமனையிலும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்திற்கு அமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டியவராயின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்கு அமரும் மொழி மூலம், விண்ணப்பதாரரது கையொப்பம் மற்றும் திணைக்களத் தலைவரது சான்றிதழ் என்பவற்றுடன் சரியாகப் பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் மற்றும் திணைக்கள இணையத்தளத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய விண்ணப்பதாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரி என்பன குறிப்பிட்டு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். அங்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற தேவையான தகவல்களை உறுதிப்படுத்தும் பொருட்டு நீங்கள் தன்வசம் வைத்திருக்கும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான இருப்பின் பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பம் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

11. மேலே 09 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

12. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் மாத்திரமேயாகும். விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம் இருந்து சான்றுப்படுத்தி இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தமக்குரித்தான பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்கு அமருதல் வேண்டும். பரீட்சைத் தினமன்று தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்கு அமருவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

13. விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

14. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே மொழி மூலங்களில் ஏதாவது பொருந்தாதத் தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

கலாநிதி கே. ஏ. சீ. எச். ஏ. கொத்தலாவல,
பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களம்.

2022, ஓகத்து 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாய அமைச்சு**

**கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான
மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2021 (2022)

THE 3RD EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE - 2021 (2022)

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :-

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐ (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA) :
..........................................................................
(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் :
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உதாரணம் GUNAWARDHANA, H. M. S. K.) :
..........................................................................
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தபால் முகவரி : ஆங்கில பெரிய எழுத்துக்களில் (அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக) :
..........................................................................
..........................................................................

3. பால் :
பெண் - 1
ஆண் - 0 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

6. இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றினீரா இல்லையா என்பதை குறிப்பிடுக. அவ்வாறாயின், ஆண்டு மற்றும் மாதம் என்பவற்றை குறிப்பிடுக : ..........................................................................

7. பிறந்த திகதி :
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

8. பதவிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................................................

9. திணைக்களத்தின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................................................

10. இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் I ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :----.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும், மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் : ரூபா ----.
பணம் செலுத்தப்பட்ட பணிமனை :----. பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்) |
|---|

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**.................................................................................................................. ஊடாக**
**கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடையவர் என்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

......................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.
(அலுவலக முத்திரை)

திகதி :----.

*(கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் - விண்ணப்பதாரர் இணைப்புச் செய்யப்பட்டுள்ள அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபை/நகர சபை /அலகு/தலைவர் ஒருவரால் சான்றுப்படுத்தல் வேண்டும்.)

08-112

---

எனது இலக்கம் :- DNA2/MA7/3/15

**தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவித் தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிப்பாதுகாப்பு பயிற்சித் தரம், செவிப்புல- கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரம் மற்றும் திரைப்படப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரம் மற்றும் சுவடி மீள்வடிவமைப்பாளர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2022 (2021)**

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிப்பாதுகாப்பாளர் பயிற்சித் தரம், செவிப்புல- கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரம், திரைப்படப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரம் மற்றும் சுவடி மீள்வடிவமைப்பாளர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு திணைக்களத்தில் சேவையாற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| வெற்றிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|
| சுவடிப்பாதுகாப்பாளர் | 22 |
| செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் | 07 |
| திரைப்படப் பாதுகாப்பாளர் | 04 |
| சுவடி மீள்வடிவமைப்பாளர் | 06 |

இவ்வெற்றிட எண்ணிக்கையில் 30% இனர் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

01. இப்பரீட்சை மூலம் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிப்பாதுகாப்பாளர் பயிற்சித் தரம், செவிப்புல- கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரம், திரைப்படப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரம் மற்றும் சுவடி மீள்வடிவமைப்பாளர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.09.12 ஆந் திகதியாகும். இப்பரீட்சையானது 2022/11 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் நடாத்தப்படும்.

02. **பதவியில் ஒப்படைக்கப்படும் பணிகள் :**

| பதவி இலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்கள் | பணிகள் |
|---|---|---|
| 01 | சுவடிப்பாதுகாப்பாளர் | தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள சுவடிகள், வரைபடங்கள், படங்களைப் பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைக்கப்பட்டு பேணிச் செல்லல், மறுசீரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் இலக்குகளுக்கு ஏற்ப விஞ்ஞான ரீதியான வழிகாட்டல்கள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல், புத்தகம் கட்டுதல் தொடர்பாக பயிற்சிகளை வழங்குதல், அவசியப்படும் போது அரச நிறுவனங்கள் / தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கான ஆவணப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பங்கேற்றல், அரச ஆவணங்களின்பாதுகாப்புக்குரிய நடைமுறை பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வழிபாட்டுத் தளங்களில் உள்ள ஆவணப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பங்கேற்றல், இடர்களுக்கு உட்பட்ட ஆவண மறுசீரமைப்பு தொடர்பான நடைமுறை பயிற்சிகளை வழங்குதல், சுவடிப்பாதுகாப்பு மேற்பார்வை உத்தியோகத்தர், பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் ( சுவடிகள்), தேசிய சுவடிகள் கூட பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர் ( தொழில்நுட்பம்), தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், செவிப்புல -கட்புல மற்றும் இலத்திரனியல் ஆவணம்) மற்றும் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரித்தான ஏனைய பணிகள் |
| 02 | செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் | தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள செவிப்புல - கட்புல ஆவணங்களை பேணல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் அவற்றினை ஆய்வு செய்பவர்களுக்கும் கேட்போருக்கும் கிடைக்கச் செய்தல், அந்த ஆவணங்களின் பிரதிகளை கணினி அல்லது செவிப்புல - கட்புல ஊடகங்களின் மூலம் ஆய்வு செய்பவர்களுக்கு வழங்குதல், செவிப்புல - கட்புல உபகரணங்களை நிர்வகித்தல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல், கேட்போர்கூடத்தில் நடாத்தப்படும் விழாக்களுக்கு அவசியப்படும் செவிப்புல - கட்புல உபகரணங்களின் பயன்பாட்டுக்கு அவசியப்படும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் ( செவிப்புல - கட்புல) தேசிய சுவடிகள் கூட பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் ( திரைப்பட மற்றும் செவிப்புல - கட்புல), தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் ( தொழில்நுட்ப, செவிப்புல - கட்புல) மற்றும் இலத்திரனியல் ஆவணம்) மற்றும் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரித்தான ஏனைய பணிகள் |
| 03 | திரைப்படப் பாதுகாப்பாளர் | தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள திரைப்படங்களை பேணிச் செல்லல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் அவற்றை ஆராய்பவர்களுக்கு பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தல், அத்திரைப்படங்களின் பிரதிகளை ஆய்வு செய்பவர்களுக்கு வழங்குதல், திரைப்பட உபகரணங்களை நிர்வகித்தல் மற்றும் பழுதுபார்த்தல், கேட்போர் கூடத்தில் நடைபெறும் விழாக்களுக்கு அவசியப்படும் திரைப்பட உபகரணங்களின் பாவனைக்கு அவசியப்படும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் ( திரைப்படம்), தேசிய சுவடிகள் கூட பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் ( திரைப்பட மற்றும் செவிப்புல - கட்புல), தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் (தொழில்நுட்ப, செவிப்புல - கட்புல மற்றும் இலத்திரனியல் ஆவணம்) மற்றும் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரித்தான ஏனைய பணிகள் |

| | | |
|---|---|---|
| 04 | சுவடி மீள்வடிவமைப்பாளர் | தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் சுவடிகள் மற்றும் செய்தித்தாள்களில் உள்ள தகவல்களை வேறு ஊடகத்தில் வைப்பதற்காக சுவடிகளை மீள்வடிவமைத்தல், நுண் புகைப்படமாக்கல் செய்யப்பட்ட புகைப்படங்களின் தரத்தைப் பரீட்சித்தல், திணைக்களத்தின் புகைப்படமெடுத்தல் நடவடிக்கை மற்றும் பொது மக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப அவசியப்படும் ஆவணங்களை மீள்வடிவமைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளல், பிரதான சுவடி மீள்வடிவமைப்பு உத்தியோகத்தர், தேசிய சுவடிகள் கூட பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் ( தொழில்நுட்பம்), தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் (தொழில்நுட்பம், செவிப்புல - கட்புல மற்றும் இலத்திரனியல் ஆவணங்கள்) மற்றும் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பதவிக்கு உரித்தான ஏனைய பணிகள் |

03. **சேவை நிபந்தனைகள்**:

(அ) அரச சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கு 2018.06.05 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதியில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், இலங்கை தொழில்நுட்பசேவையின் சேவைப் பிரமாணங்களுக்கும் அவ்வொழுங்குவிதிகளுக்கு மற்றும் சேவைப் பிரமாணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன்பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள அல்லது திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் சுவடி பாதுகாப்பாளர் /செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் /திரைப்படப் பாதுகாப்பாளர்/சுவடி மீள்வடிவமைப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

(ஆ) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இப்பதவி ஓய்வூதியத்துடன் கூடியது எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எதிர்வரும் காலங்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள உத்தியோகத்தர்கள் ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், நீர் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(இ) இப்பயிற்சித் தரத்தில் சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு வருட பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் குறித்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியெய்ததாக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் சுவடிப் பாதுகாப்பாளர் III ஆந் தரம் /செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் III ஆந் தரம் /திரைப்படப் பாதுகாப்பாளர் III ஆந் தரம் மற்றும் சுவடி மீள்வடிவமைப்பாளர் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்க்கப்படுவர். இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிப் பாதுகாப்பாளர் III ஆந் தரத்துக்கு /செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் III ஆந் தரத்துக்கு /திரைப்படப் பாதுகாப்பாளர் III ஆந் தரத்திற்கு/ சுவடி மீள்வடிவமைப்பாளர் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடங்களினுள் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் காண் பரீட்சைக்கு மேலதிகமாக திணைக்களப் பரீட்சையிலும் சித்தியெய்தல் வேண்டும்.

(ஈ) தமக்கு வழங்கப்படும் பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரிகளின் நியமனம் இரத்துச் செய்வதற்கு தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

04. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** : தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிப்பாதுகாப்பாளர் பயிற்சித் தரத்தில் /செவிப்புல- கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரத்தில் /திரைப்படப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரத்தில் /சுவடி மீள்வடிவமைப்பாளர் பயிற்சித் தரத்திலே தான் தொடர்ச்சியாக பெற்ற சம்பள அளவுத்திட்டத்தில் தொடர்ந்தும் அமர்த்தப்படுதல் வேண்டும் என்பதோடு, பயிற்சிப் பாடநெறியின் முடிவில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தும் வரை இலங்கை தொழில்நுட்பச் சேவையின் ஆரம்ப சம்பள ஏற்றத்துக்குச் சமனான வருடாந்த கொடுப்பனவை சம்பளத்துக்கு மேலதிகமாக செலுத்தப்படும். பயிற்சிக் காலப்பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர் ஒருவர் இரண்டாம் வருடத்தில் தான் இதுவரை அமர்த்தப்பட்டிருந்த சம்பள அளவுத்திட்டத்தினை விட உயர் சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தப்படுவார் என்பதோடு, கொடுப்பனவு தொடர்ச்சியாகவும் செலுத்தப்படும். பயிற்சியை திருப்திகரமாக பூர்த்தி செய்து பரீட்சையிலும் சித்தியெய்திய பின்னர் 2000.03.02 ஆந் திகதிய இலக்கம் 07/2000 உடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப சம்பள மாற்றம் மேற்கொள்ளப்படும்.

05. **ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் :**

| பதவி | (அ) கல்வித் தகைமைகள் | (ஆ) தொழில்சார் தகைமைகள் | (இ) அனுபவம் |
|---|---|---|---|
| சுவடிப்பாதுகாப்பாளர் (பயிற்சித் தரம்)<br>செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் (பயிற்சித் தரம்)<br>திரைப்படப் பாதுகாப்பாளர் (பயிற்சித் தரம்)<br>சுவடி மீள்வடிவமைப்பாளர் (பயிற்சித் தரம்) | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் க.பொ.த (சா. தர)ப் பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். | ஏற்புடையதற்றது | ஆரம்ப நிலை மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வகுதியில் உறுதிப்படுத்தப்பட்டு, திணைக்கள ரீதியான பதவியொன்றில் குறித்த துறையில் குறைந்த பட்சம் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதும் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல். |

(ஈ) *உடற் தகைமைகள்:-*

எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(உ) *ஏனைய :*

I. நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

II. குறித்த திகதிக்கு உடன்முன்னராக அரச சேவையில் நிரந்தரமானதும், திணைக்கள ரீதியானதுமானவர்களில் ஐந்து (05) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதோடு அது பற்றி திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

III. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு அவசியப்படும் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதனை ஏற்றுக்கொள்வது உத்தியோகத்தர் அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல விதத்திலும் முழுமைப்படுத்தியிருப்பின் மாத்திரமேயாகும்.

(ஊ) *வயதெல்லை* : ஏற்புடையதற்றது.

06. **ஆட்சேர்ப்பு முறை** :- எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பிற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(அ) *எழுத்துப் பரீட்சை.-*

இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் நடைபெறும் என்பதோடு விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது. பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய இரண்டு (02) வினாப் பத்திரங்களைக் கொண்டு எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைய பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய குறைந்தபட்ச புள்ளியின் அளவு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| பாடங்கள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவு (அவ்வந்த பதவிக்குரிய விடயப் பரப்புடன் கூடிய பரீட்சையாகும்.) | 02 மணித்தியாலம் | 100 | 40 |

பரீட்சார்த்திகள் சகல வினாப் பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும் என்பதோடு அனைத்து வினாக்களுக்கும் ஒரே மொழியில் மாத்திரம் விடையளித்தல் வேண்டும்.

i. **பரீட்சை பெறுபேறுகள்**.- பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகளை அறிவிப்பதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் அல்லது அறிவிக்கப்படும்.

07. **பரீட்சைக்கான பாடத் திட்டம்** :

| வினாத் தாளின் பெயர் | பாடத் திட்டம் |
|---|---|
| 01. நுண்ணறிவுத் தேர்வு | பரீட்சார்த்தியிடம் காணப்படும் பொது நுண்ணறிவு, பகுத்தறியும் திறன், கருத்துரைப்பு, எண்ணிக்கை சார்ந்த திறன்கள் மற்றும் புரிந்துகொள்ளும் திறன் ஆகியவற்றை அளவிடும் விதம் இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 02. தொழில்நுட்பம் - அந்த பதவிக்குரிய தொழில்நுட்ப மற்றும் விடயப்பரப்புடன் கூடிய பரீட்சையாகும். | பதவிக்குரிய தொழில்நுட்ப அறிவை அளவிடும் செயற்பாடு இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |

08. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். மேலும் இப்பரீட்சைக் கட்டணத்தை நாட்டின் எந்தவொரு தபாலகம் /உப தபாலகம்/மாவட்ட /பிரதேச செயலகங்களில் பணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் வரவுவைக்கும் வகையில் செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்திய விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டிவிடல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப்படவும் மாட்டாது. அவ்வாறே பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்வது பயனளிக்கும்.

09. **விண்ணப்பிக்கும் முறை** .-

(அ) விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது தலைப்பிலுள்ள பெயரினை தமிழ் விண்ணப்பத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் சிங்கள விண்ணப்பத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியமாகும். விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு ஏற்ப அமைதல் வேண்டும் என்பதோடு, அது 8 1/2 " × 12 " என்ற அங்குல (ஏ 4) அளவுடைய கடதாசியில் விண்ணப்பதாரி தனது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். கணினியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தைப் பயன்படுத்த முடியும். விண்ணப்பம் ஒரு மொழியினால் மாத்திரம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்புக்கள் இலக்கம் 01 தொடக்கம் 08 வரை முதல் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.) பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாது விடின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

(இ) பரீட்சைக்கான முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் 2022.09.12 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "தேசிய சுவடிகள்கூட பணிப்பாளர் நாயகம், தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம், பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07." என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " .......................................... .................................................................................. பயிற்சித் தரத்திற்காக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2022 (2021)" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் 2022.09.12 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர், அரச நிரந்தர பதவி வகிக்கும் பதவிநிலை தரத்தை உடைய உத்தியோகத்தரினால் அல்லது சான்றுப்படுத்த வேண்டும்.

(உ) முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.விண்ணப்ப முடிவுத் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக அறிவித்த அறிவித்தலொன்று பத்திரிகைகளிலும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். பரீட்சை நடாத்தப்படும் என அறிவித்தல் வெளியிடப்பட்டு குறைந்தது 02 அல்லது 03 நாட்களுக்கு பின்னரும் தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள படி அது குறித்து இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர் ,விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நிவர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சை அனுமதிப் பத்திர நிழற் பிரதியொன்றை பெறுவதற்காக விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுறுதி வாய்ந்ததாகும். அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

10. **பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) சகல விதத்திலும் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தனது பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்தியும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு தமக்குரிய அனுமதி அட்டையில் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் தோற்றுகின்ற நாளில் அம்மண்டப பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**குறிப்பு** :- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்டவர் எனக் கருதப்பட மாட்டார்.

(இ) பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

11. போலியான தகவல்களுக்கான தண்டனை : எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தன்மையை

இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும்.

12. **ஏனைய விடயங்கள்**.- இவ்விதிமுறைகளைக் கருத்திற் கொள்ளாத விடயங்கள் தொடர்பில் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம்,
தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம்.

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம்,
இலக்கம் 07,
பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07,
2022.08.12.

மாதிரி விண்ணப்பப்படிம்

அலுவலக உபயோகத்திற்காக [ ]

**தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவைகள் வகுதியின் .................................................... பயிற்சித் தரத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2022 (2021)**

Limited Competitive Examination for Recruitment to the Post of Supervising Management Assistant Technical Services Category ................................................ Training Grade of the Department of National Archives – 2022 (2021)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி/பதவிகள்

| தெரிவுகள் | பதவி இலக்கம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

(வர்த்தமானி அறிவித்தல் 02 ஆம் பந்தி பிரகாரம் இலக்கமிடவும்.)

01 முழுப் பெயர் : ....................................................................................................................
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

முதலெழுத்துக்களுடன் பெயர்: .................................................................................... திரு./திருமதி/செல்வி,
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில் ) உதா : RATHNAYAKA, H.M.S.

03 முழுப் பெயர் : ....................................................................................................................
(சிங்களத்தில்) : ....................................................................................................................................

04. அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ..........................................................
அனுமதி அட்டை இம்முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
..........................................................................................................................................
..........................................................................................................................................

05. தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்) :- ..........................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

06. பெண் /ஆண் பால்நிலை : பெண் - 1 ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்) ☐

07. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

08. கையடக்கத் தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

09. பிறந்த திகதி:

ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

10. க.பொ.த. (சா./த.)

10.1 க.பொ.த. ( சா./த.) - முதற் தடவை

பரீட்சைக்கு தோற்றிய வருடம் : ☐
பரீட்சை சுட்டிலக்கம்: ☐

| பாடம் | சித்திகள் | பாடம் | சித்திகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

10.2 க.பொ.த. ( சா./த.) - இரண்டாம் தடவை

பரீட்சைக்கு தோற்றிய வருடம் : ☐
பரீட்சை சுட்டிலக்கம்: ☐

| பாடம் | சித்திகள் | பாடம் | சித்திகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

11. தற்போது வகிக்கும்/இதற்கு முன்னர் வகித்த பதவிகள் தொடர்பான விபரம் :

11.1 ஆரம்பப் பதவி : ..........................................................................

11.2 முதல் நியமனத் திகதி : ..........................................................................

11.3 பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ..................................................................

11.4 தற்போது வகிக்கும் பதவி மற்றும் தரம்: ..................................................................

11.5 தற்போது வகிக்கும் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ..................................................................

11.6 தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் முன்னைய சேவைக் காலம் பற்றிய விபரங்கள் :

| சேவை காலம் முதல் | வரை | பதவிப் பெயர் | சேவை நிலையம் |
|---|---|---|---|
| I. ................ | ................ | ........................... | ............................ |
| II. ................ | ................ | ........................... | ............................ |
| III. ................ | ................ | ........................... | ............................ |

12. சேவைக் காலத்தினுள் ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ளீரா அவ்வாறாயின் அதுபற்றிய தகவல்களை சுருக்கமாக குறிப்பிடவும் :

.....................................................................................................................................................

13. நீங்கள் எப்பொழுதாவது ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?
(உரிய கூட்டினுள் (√) என்ற அடையாளமிடவும்.) ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும்
ஆம் ☐ இல்லை ☐

.....................................................................................................................................................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள்:
(I) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம்:...........................................................................................
(II) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி:.........................................................................................
(III) செலுத்தப்பட்ட தொகை:.........................................................................................

| பற்றுச்சீட்டு கழராதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.) |
|---|

15. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூர்த்தி செய்யாதிருப்பதால் மற்றும்/ அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாக பூர்த்தி செய்திருப்பதால் ஏற்படக்கூடிய இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளையும் நிவர்த்தியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

திகதி : .............................. விண்ணப்பதாரியின் கையொப்பம்: .....................................

16. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்** :

இவ் விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கும் ...................................................................... திரு./திருமதி./ செல்வி. இவ்வமைச்சில் /திணைக்களத்தில்.............................. பதவியில் சேவையாற்றுவதாகவும் ........................................... ஆந் திகதிக்கு உடன்முன்னரான தன்னுடைய காலப்பகுதியினுள் அவரின் சம்பள ஏற்றம் சகலதையும் உழைத்துள்ளதாகவும், அக்காலப்பகுதியினுள் குற்றத்திற்கு ( .............................................) வேறு எந்தவிதத்திலும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு அவர் உட்படவில்லை என்றும், அறிவித்தலில் 5 ஆம் பந்திக்கு ஏற்ப தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துள்ளதாகவும், பிரத்தியேகக் கோவைக்கு ஏற்ப

குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர் எனவும் பரீட்சைக் கட்டணமாக ரூபா. 600 இனைச் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் எனவும் ........................ ........... ஆந் திகதி அவரின் கையொப்பம் என் முன்னிலையில் இடப்பட்டதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : .................................. ....................................................

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை : ....................................................
அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் பெயர் : ....................................................
பதவி : ................................................
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**திணைக்களத் தலைவரின் பரிந்துரை மற்றும் சான்றிதழ் :**

இத் திணைக்களத்தில் சேவையாற்றும் ............................................................ திரு./திருமதி/ செல்வி, ....................................... .................... பதவியில் சேவையாற்றுவதாகவும் .................................................. ஆந் திகதிக்கு உடன்முன்னரான தன்னுடைய காலப்பகுதியினுள் அவரின் சம்பள ஏற்றம் சகலதையும் உழைத்துள்ளதாகவும், அக்காலப்பகுதியினுள் குற்றத்திற்கு ( .............. ................................) வேறு எந்தவிதத்திலும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு அவர் உட்படவில்லை என்றும், அறிவித்தலில் 5 ஆம் பந்திக்கு ஏற்ப தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துள்ளதாகவும், பிரத்தியேகக் கோவைக்கு ஏற்ப குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி : .................................. .....................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை :

08-116

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.